## வலிமிகும் இடங்களை அறிக.

அந்த, இந்த, எந்த என்னும் சொற்களுக்குப்பின் வலிமிகும்.




நடவடிக்கை 1

## அந்த, இந்த, எந்த ஆகிய சொற்களின் பின் வலிமிகும்


- அந்த + செய்தி = அந்தச் செய்தி
- அந்த + கை = அந்தக் கை
- இந்த + பொருள் = இந்தப் பொருள்
- இந்த + கேள்வி = இந்தக் கேள்வி
- எந்த + பக்கம் = எந்தப் பக்கம்

**சரியான விடைகளைக் கொண்டு நிறைவு செய்க.**

வலிமிகுந்து எழுதுக.

1. அந்த + பையன் = ______
2. இந்த + சொல் = ______
3. எந்த + குழந்தை = ______
4. அந்த + கீரை = ______
5. இந்த + குறிப்பு = ______
6. எந்த + கழகம் = ______
7. அந்த + குடை = ______
8. இந்த + பரிசு = ______
9. எந்த + பறவை = ______
10. அந்த + பாதை = ______
11. இந்த + பாவை = ______
12. எந்த + கதை = ______

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அந்தக்குடை | எந்தப்பறவை | இந்தப்பாவை | அந்தப்பையன் | எந்தக்குழந்தை | இந்தக்குறிப்பு |
| இந்தப்பரிசு | அந்தப்பாதை | எந்தக்கதை | இந்தச்சொல் | அந்தக்கீரை | எந்தக்கழகம் |



## வலிமிகும் இடங்கள் அறிக.

அங்கு, இங்கு, எங்கு என்னும் சொற்களுக்குப் பின் வலிமிகும்.


**எடுத்துக்காட்டு:**

| | நிலைமொழி | | வருமொழி | | |
|---|---|---|---|---|---|
| 1 | அங்கு | + | சென்றான் | = | அங்குச் சென்றான் |
| 2 | இங்கு | + | பார்த்தான் | = | இங்குப் பார்த்தான் |
| 3 | எங்கு | + | படித்தான் | = | எங்குப் படித்தான் |

**சரியான விடைகளைக் கொண்டு நிறைவு செய்க.**

வலிமிகுந்து எழுதுக.

பூங்காவில் புத்தகம் படிக்க வந்தேன். [அங்கு + பறந்த] பறவைகள் சில மரக்கிளையில் அமர்ந்தன. [அங்கு + கண்ட] இயற்கை காட்சிகள் மிக அழகானவை. [இங்கு + சாய்ந்த] தென்னை மரம் ஒன்றனைக் கண்டேன். [அங்கு + திரிந்த] சில நாய்கள் சண்டையிட்டுக் கொண்டன. மாமரம் ஒன்றில் நிறைய மாங்கனிகள் காய்த்திருந்தன. [அங்கு + சென்று] பறிக்க எண்ணம் கொண்டேன். ஆனால், [எங்கு + பறித்தாய்] என்று தாயார் கேள்வி கேட்பார் என அஞ்சினேன்.



| | | | | | |
|---|---|---|---|---|---|
| அங்குச்சென்று | அங்குத்திரிந்த | இங்குச்சாய்ந்த | அங்குக்கண்ட | அங்குப்பறந்த | எங்குப்பறித்தாய் |